RESEARCH ARTICLE

DOI: 10.34256/irjt224s22229

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



OPEN ACCESS

# சிலப்பதிகாரத்தில் வழிபாடுகள்

பெ. ஜோதி [அ, *], க. புவனேஸ்வரி [அ]

[அ] தமிழ்த்துறை, தேசியக்கல்லூரி (தன்னாட்சி), (பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவுபெற்றது). திருச்சிராப்பள்ளி-620001, தமிழ்நாடு, இந்தியா

# Rituals in Silapathikaram

P. Jothi [a, *], K. Bhuvaneswari [a]

[a] Department of Tamil, National College (Autonomous), (Affiliated to Bharathidasan University), Tiruchirappalli-620001, Tamil Nadu, India

* Corresponding Author: jsm5122012@gmail.com

Received: 22.09.2022
Revised: 11-11-2022
Accepted: 13-11-2022
Published: 01-12-2022

**ABSTRACT**

Introduction of epic Silapathikaram and the purpose of the epic are mentioned in the introductory part of this article. The explanation and origin of worship are described in detail. The rituals mentioned in Silapathikaram and their purpose are explained. Places of worship, rituals performed in temples and rituals of castes are explained. Shiva worships, Tirumal worships, Kotravai worships, Indra worships, Murugan worships, the red-headed Kannagi worship, and the differences between Koil and Kottam are explained. In the conclusion, it is said that Silapathikaram rituals are suitable for the worships of five land forms.

**Keywords:** Silapathikaram, Tirumal worships, Kotravai worships, Indra worships, Murugan worships

## முன்னுரை

காப்பிய காலம் என்று குறிப்பிடும் கி.பி. 2-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 6ஆம் நூற்றாண்டுவரை உள்ள இக்காலக்கட்டத்தில் கி.பி. 2-ஆம் நூற்றாண்டில் இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் என்றும் காப்பியத்தை இவ்வுலகுக்கு அளித்தார். இதுவே தமிழின் முதன்மை காப்பியமாகவும், ஐம்பெரும் காப்பியங்களின் முதன்மையாகவும், இரட்டைக்காப்பியங்களின் ஒன்றாகவும், முதன்மையாகவும் போற்றப்படுகிறது. இக்காலம் வரை மக்களின் வாழ்வியல் முறைகளில் ஒன்றான வழிபாடுகளை சிலப்பதிகாரம் என்னும் காப்பியத்தின் வழி பகுத்து விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## சிலப்பதிகாரம் பெயர்க் காரணம்

தமிழ் காப்பிய மரபில் தனித்துவமான அடையாளமாக விளங்கும் முத்தமிழ் காப்பியம் சிலப்பதிகாரம் ஆகும். “நெஞ்சை அள்ளுகின்ற காப்பியம்” என்ற பெருமைக்குரியதாகும். இது சிலம்பு + அதிகாரம் என்பது சேர்ந்து சிலப்பதிகாரம் என்றானது. சிலம்பு என்கின்ற அணியே இந்த கதையை அலங்கரிக்க காரணமானதால் இப்பெயர் பெற்றது. வழிபாடு விளக்கம்: வழிபாடு என்பது தெய்வத்தையோ அல்லது இயற்கை சக்தியை நோக்கி முறையான அல்லது முறைசாராத குழுக்கள் அல்லது அதற்கென நியமிக்கப்பட்டவரால் மேற்கொள்ளப்பட்ட முறையே வழிபாடாகும்.

## வழிபாட்டின் தோற்றம்

சங்க காலத்தில் வாழ்ந்த மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை வாழ்ந்தனர் என்பதும், இயற்கையானது மாறும்போது இயற்கையின் பாதிப்புக்குட்பட்ட ஆதி மனிதன் அவற்றின் தாக்குதல்களினால் போராடும் சூழலில் தனக்கு மேலான சக்தி ஒன்று உள்ளது என்பதை உணர்ந்தனர். அந்த சக்தியே பின்னாளில் தெய்வமாக மாறி, அவற்றைப் பின்பற்றி வந்த முறையானது வழிபாடாக மாறியது.

## சிலப்பதிகாரத்தில் வழிபாட்டு நோக்கம்

அகம், புற நிகழ்வுகளைச் சுட்டினாலும் ஊழ்வினை நிலையை வெளிப்படுத்தும் போக்கில் அமைய பெற்றும், அதில் அறம் சார்ந்த வழிபாட்டு நிலையில் இறைவனை வழிபட்ட நிலையையும் எடுத்துக் கூறுவதாக அமைகிறது.

### சிலப்பதிகாரத்தில் வழிபாடு நிகழ்ந்த இடங்கள்

சிலப்பதிகாரத்தில் சுட்டப்பெறும் வழிபாட்டு முறையானது பெரும்பாலும் கோயில்களிலும், கோட்டங்களிலும் நிகழ்ந்தனவாகும்.

### வழிபாட்டு முறை

வழிபாடு என்பது வணங்குதல், பூசை செய்தல் என்பதாம். இது வழக்கமாக செய்தல் என்னும் பொருளில் வழங்கப்படுகிறது. வழிபாடானது பாடல்கள் பாடியோ, மந்திரங்கள் கூறியோ, பொருட்களை படைத்தோ நடைபெறுகிறது. மனிதன் தன் தேவைக்காகவும், சுய நலத்துக்காகவும் இறைவனை நாடிச் செல்லும் நிலையே வழிபாடாக மேற்கொள்ளப்படுகிறது. மனிதனின் இன்பமான வாழ்க்கைக்கும் தன் சிக்கல்கள் தீரவும் வழிபாடானது அவரவர் விருப்பத்திற்கு இணங்க மாற்றம் கொண்டமையைக் காணமுடிகிறது (Arul Pathmarasan, 2018).

### சிலப்பதிகாரத்தில் இயற்கை வாழ்த்து

இயற்கை தெய்வங்களான ஞாயிறு, திங்கள், மழை இவற்றைப் போற்றுகின்ற வாழ்த்துப் பகுதிகள் சிலப்பதிகாரத்தின் தொடக்கத்தில் இறை வாழ்த்துப்போல் அமைந்துள்ளன. இதனை,

"திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்!

ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்!

மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்!" (Manickavasagan, 2010)

இப்பாடல் வரிகளில் இளங்கோவடிகள் போற்றுகிறார்.

## கோயில்களில் வழிபாடு

### சிலப்பதிகாரத்தில் சிவ வழிபாடு

சோழர் நகரமாகிய புகாரில் சிவபெருமானுக்குக் கோயில் இருந்தது. என்பதனை,

“பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்”

“நுதல்விழி நாட்டத்து இறையோன் கோயிலும்” என்ற பாடல் வரிகள் குறிப்பிடுகிறது (Manickavasagan, 2010).

திரிபுரத்தை அழிக்க வேண்டும் என்று தேவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, சிரிப்பாலேயே திரிபுரத்தை எரிக்க, இறைவி ஒருபுறம் ஒதுங்கி நிற்க, திரிபுரம் எரித்த வெற்றிக் களிப்பிலே கைகொட்டி ஆடிய கொடுகட்டி ஆட்டமும்,

"திரிபுரம் எரியத் தேவர் வேண்ட

எரிமுகப் பேர் அம்பு ஏவல் கேட்ப

உமையவள் ஒரு திறன் ஆக ஓங்கிய

இமையவன் ஆடிய கொடுகட்டி ஆடலும்" (Manickavasagan, 2010)

இப்பாடல் வரிகள் மூலம் அறிவதுடன், சிவபெருமான் நெற்றிக்கண் உடையவன் என்பதும் உமையவளை ஒரு பாகத்தில் கொண்டவன் என்பதும் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது.

சிவபெருமானாம் திரு ஆலவாயான் திருக்கோயிலில் நான்மறை ஓசைகள் முழங்கின. காலையில் முரசு முழக்கினர். மறையவர்கள் வேள்வித் தீயின் ஆகுதி புகை ஏந்தி வந்து மன்னனை எதிர் கொண்டனர். அப்புகை மன்னன் மார்பில் அணிந்த மாலையில் படிய, அரசர் பெருமான் யானை மேல் ஏறி அமர்ந்தான். என்பதனை,

"காலை முரசம் கடைமுகத்து எழுதலும்

நிலவுக்கதிர் முடித்த நீள்இரும் சென்னி

உலகு பொதி உருவத்து உயர்ந்தோன் சேவடி

மறஞ்சேர் வஞ்சி மாலையோடு புனைந்து

இறைஞ்சாச் சென்னி இறைஞ்சி வலம்கொண்டு

மறையோர் ஏந்திய ஆவுதி நறும்புகை

நறைகெழு மாலையின் நல்லகம் வருந்தக்

கடகளி யானை பிடர்தலை ஏறினன்" (Manickavasagan, 2010)

என்ற இப்பாடல் வரிகள் விளக்குகின்றன.

வஞ்சி மாநகரில் உள்ள சிவன் கோயிலில் சேரமான் வஞ்சிப்பூவை தன்தலைமேல் சூடி, சிவபெருமான் திருவடிகளை பணிந்து வணங்க, வீரத்திற்கு எடுத்துக்காட்டாய் வஞ்சி மாலை அணிந்த வேறு எவரையும் வணங்காத தலை உடைய சேரமன்னன் ஆண்டவன் கோயிலை வலம் வந்து இறைவனை தொழுது பணிந்தான்.

மேலும், மன்னன் போருக்கு செல்லுகின்ற பொழுது சிவபெருமான் சூடிய வஞ்சிமாலையை அணிந்து இறைவனை வணங்கியும் செல்லும் வழக்கம் இருந்தது.

செங்குட்டுவன் நடத்திய போரில் தோற்றவர்கள் உடல் முழுவதும் திருநீறு பூசிய சிவனடியார்கள் போலவே தங்களை மாற்றிக்கொண்டு ஓடினார்கள் என்று குறிப்பிடுகின்ற செய்தியால் சிலப்பதிகாரக் காலத்தில் திருநீறு பூசி, சிவனை வழிபடும் வழக்கம் இருந்தமை உறுதியாகியது.

## சிலப்பதிகாரத்தில் திருமால் வழிபாடு

புகார் நகரில் இருந்த திருமால் கோயில், "நீலமேனி நெடியோன் கோயில்" என்று சுட்டப்படுகிறது. இதனை,

"நீலமேனி நெடியோன் கோயிலும்"

இப்பாடல் வரி கூறுகிறது. (Manickavasagan, 2010)

திருமால் கோயிலில் இந்திரவிழாவின்போது வேள்வி நிகழ்த்தப்பட்டதனை,

“நான்மறை மரபின் தீமுறை ஒருபால்”

பழம்பெரும் புகழுடைய, பிரம்மதேவன் அருள்நிறை மறைநூல் நெறிப்படி தீமுறை வேள்விகள் ஒருப்பக்கம் நடந்தபடி இருந்தன என்பது புலப்படுகிறது. (Manickavasagan, 2010)

### சிலப்பதிகாரத்தில் இந்திரன் வழிபாடு

இந்திரனுக்கு புகார் நகரில் கோயில் இருந்தது. இந்திரவிழாவின் போது வேள்விகள் செய்தனர். இதனை,

“மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்”

இப்பாடல் வரி மூலம் அறியப்படுகிறது (Manickavasagan, 2010).

### மணிமேகலையில் இந்திரவிழா

மணிமேகலையிலும் இந்திரவிழா தொடங்கியவுடன் வச்சிரக்கோட்டத்து முரசினையே அறைந்து சாற்றியதாகச் சாத்தனாரும் பாடியுள்ளார். இதனை,

“வச்சிரக் கோட்டத்து மணம்கெழு முரசம்” (Dhandapani, 2010)

என்ற இவ்வரியில் அறியமுடிகிறது.

### சிலப்பதிகாரத்தில் முருகன் வழிபாடு

முருகன் ஆறுமுகத் தோற்றத்தில் அழகுடன் எழுந்தருளிய கோயிலும் புகார் நகரில் இருந்தது. என்பதனை,

“அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்”

என்ற இப்பாடல் வரியில் உணரப்படுகிறது (Manickavasagan, 2010).

பாண்டிய நாட்டில் ஐயை கோயிலும் இருந்தது. வேத மந்திரங்கள் சிறப்புமிகு துர்க்கையின் கோயில் கதவுகள் தாமாக மூடிக் கொண்டது என்றும் சிலப்பதிகாரம் கூறக் காண்கிறோம்.

“மையறு சிறப்பின் ஐயை கோயில்

செய்வினைக் கதவம் திறவா தாகலின்”

இப்பாடல் வரி மூலம் அறியப்படுகிறது (Manickavasagan, 2010).

## கோட்டங்களில் வழிபாடு

### கோட்டம் விளக்கம்

கோட்டம் என்ற சொல்லானது கோயில் என்னும் பொருளில் வழங்கப்படுகிறது. வேத மரபை மீறிய வழிபாடு கோட்டங்களில் நடைபெறுகிறது. கோட்டமானது, கட்டிடங்கள் இல்லாமல் திறந்த வெளியில், வேல், வச்சிரம் போன்றவற்றை நட்டுச் சுற்றிலும் வெளி அமைந்த பகுதியானது கோட்டம் என்றழைக்கப்படுகிறது.

### கோட்டங்களுக்குரிய மரபுகள்

கோட்டங்களில் தெய்வ கோலத்தை மானிடர்க்குப் புனைந்து வழிபடும் வழக்கமும், வரிப்பாடல்கள் பாடி குரவைக் கூத்து ஆடும் வழக்கமும், தெய்வமேறி ஆடும் நடைமுறையும் இருந்தன.

## சிவபெருமானுக்கு கோட்டம்

சிவன் அதிபதியாக இருக்கும் கைலாயத்தின் பெயரால் ஊர்க் கோட்டமும் இருந்தது. என்பதனை,

"உச்சிக் கிழான் கோட்டம் ஊர்க் கோட்டம்" (Manickavasagan, 2010)

என்ற இப்பாடல் வரியில் அறியமுடிகிறது.

## திருமாலுக்கு கோட்டம்

கோவலனும், கண்ணகியும் புகார் நகரை விட்டு கிளம்பும்போது அழகு விளங்கும் பாம்பாகிய ஆதிசேடன் மீது யோகா நித்திரை செய்கின்ற மணிவண்ணனாகிய திருமால் கோயிலை வலமாக வந்தும், வணங்கியும் தொழுதனர். என்பதனை,

"மணிவண்ணன் கோட்டம் வலம் செயாக்கழிந்து" என்ற பாடல் வரி குறிப்பிடுகிறது (Manickavasagan, 2010).

மணிவண்ணன் என்பது திருமாலுக்குரிய பெயராததால் திருமாலுக்கு கோட்டம் இருந்தது என்பது சிலப்பதிகாரம் உணர்த்துகிறது.

## இந்திரனுக்கு கோட்டம்

இந்திரனின் ஆயுதத்தின் பெயரால் வச்சிரக்கோட்டமும், அவனது வாகனத்தின் பெயரால் வெள்யானைக் கோட்டமும், அவன் அதிபதியாக இருக்கும் தேவலோகத்திலுள்ள கற்பகத்தருவின் பெயரால் ஒரு கோட்டமும் அந்நகரில் இருந்தன.

மாலதி தன்னிடம் பாலருந்தி விக்கிச் சோர்ந்த பாலகனின் சடலத்தோடு அங்கெல்லாம் சென்று அழுது புலம்பி வணங்கினாள்.

"அமரர் தருக் கோட்டம் வெள்யானைக் கோட்டம்

புகர் வெள்ளை நாகர் தம் கோட்டம் பகல் வாயில்

உச்சிக் கிழான் கோட்டம் ஊர்க் கோட்டம் ஊர்க்கோட்டம்

வச்சிரக்கோட்டம், புறம்பணையான் வாழ்கோட்டம்

நிக்கந்த கோட்டம் நிலாக்கோட்டம் புக்கு எங்கும்

தேவிர்காள் எம் உறுநோய் தீர்ம் என்று மேவிஓர்" இப்பாடல் வரிகள் மூலம் மேற்கூறிய செய்திகள் அறியப்படுகிறது (Manickavasagan, 2010).

இந்திரவிழா தொடங்கியவுடன் வச்சிரக்கோட்டத்து மணங்கெழு முரசினை யானைப் பிடர்தலையில் ஏற்றி விழா அறைந்தனர். வால்வெண் களிற்றரசு வயங்கிய கோட்டத்தில், அதாவது ஐராவதக் கோட்டத்தில் விழாக்கால் நாட்டினர். தருநிலைக் கோட்டத்தில் விழாவிற்குரிய மங்கல நெடுங்கொடியை வானுற எடுத்தனர். என்பதனை,

"வச்சிரக் கோட்டத்து மணம் கெழு முரசம்

கச்சை யானை பிடர்த்தலை ஏற்றி

வால் வெண் களிற்று அரசு வயங்கிய கோட்டத்துக்

கால்கோள் விழவின் கடைநிலை சாற்றி

தங்கிய கொள்கைத் தருநிலைக் கோட்டத்து

மங்கல நெடுங்கொடி வான் உற எடுத்து". (Manickavasagan, 2010)

இளங்கோவடிகள் இப்பாடல் வரிகளில் கூறுகிறார்.

## முருகனுக்குக் கோட்டம்

முருகனின் ஆயுதமாகிய வேலின் பெயரால் வழிபாடு நிகழ்ந்த வேற்கோட்டமும் இருந்தது என்பதனை,

“உவணச் சேவல் உயர்ந்தோன் நியமும்” என்ற பாடல் வரி உணர்த்துகிறது (Manickavasagan, 2010).

மேலும், மலையில் வாழும் குன்றத்தவர்கள் முருகனை எண்ணி குரவைக் கூத்தாடி பாடி மகிழ்ந்தனர்.

## ஐயை கோட்டம்

புகார் நகரிலிருந்து மதுரை செல்லும் வழியில் எயினர் குடியிருப்பில் ஐயைக் கோட்டம் இருந்தது.

“ஐயைக் கோட்டத்து எய்யா ஒரு சிறை” என்ற இவ்வரியில் அறியப்படுகிறது (Manickavasagan, 2010). மேலும், எயினர் குலகுமரியைக் கொற்றவையாக அலங்கரித்து வழிபாடு நிகழ்த்தினர்.

## காமவேள் கோட்டம்

புகார் நகரத்து நெய்தலங்கானலில் காமவேள் கோட்டம் இருந்தது. கணவரோடு இன்புற்று வாழ சோமகுண்டம், சூரியகுண்டம் ஆகிய துறைகளுக்குச் சென்று மூழ்கித் தொழ வேண்டும் என தேவந்தி கண்ணகியிடம் கூறுவதை,

“சோம குண்டம் சூரிய குண்டம் துறை மூழ்கிக்

காமவேள் கோட்டம் தொழுதார் கணவரோடு

தாமின்புறுவர் உலகத்து தையலார்”

என்ற இப்பாடல் வரிகளில் அறியமுடிகிறது (Manickavasagan, 2010).

## கண்ணகி வழிபாடு

செங்கோட்டுயர் வரையில் மலைமகளிர் கண்ணகியை வணங்குவதாக இளங்கோவடிகள் காட்டுகிறார். இதனை,

“தொண்டகம் தொடுமின் சிறுபறை தொடுமின்

கோடுவாய் வைம்மின் கொடுமணி இயக்குமின்

குறிஞ்சி பாடுமின் நறும்புகை எடுமின்

பூப்பலி செய்ம்மின் காப்புக் கடை நிறுவுமின்

பரவலும் பரவுமின் விரவுமலர் தூவுமின்

ஒருமுலை இழந்த நங்கைக்குப்

பெருமலை துஞ்சாது வளம் சுரக்க எனவே” இப்பாடல் வரிகள் விளக்குகின்றன (Manickavasagan, 2010).

மேலும், வழிபாடு செய்த இடத்தை மாடலன் மங்கல மடந்தை கோட்டம் என்று,

“மங்கல மடந்தை கோட்டத்து ஆங்கன்”

இப்பாடல் வரியின் மூலம் சுட்டுவதை காணமுடிகிறது (Manickavasagan, 2010).

மலைவளம் காணவந்த செங்குட்டுவன் கண்ணகி வரலாற்றை அறிந்து இமயக் கல்லெடுத்து கங்கையில் நீர்ப்படை செய்து நூல்நெறி மாக்கள் பாற்பட வகுத்த பத்தினிக்கோட்டத்தில் நடுகல்லாக்கி கடவுள் மங்கலம் செய்ததை,

“மேலோர் விழையும் நூல்நெறி மாக்கள்

பால் பெற வகுத்த பத்தினிக் கோட்டத்து”

இப்பாடல் வரிகளில் புலப்படுகிறது (Manickavasagan, 2010).

வேத நூல்நெறியின்படி வேள்விச்சாலை அமைத்து தீ முறை செய்தான். வேள்வியும், விழாவும் நாள்தோறும் வகுத்துக் கடவுள் மங்கலம் செய்தான். அவ்விடத்திற்கு தேவந்தியும், ஐயையும், காவற்பெண்டும் வந்து சேர்ந்த பொழுது கோயில் என்று அழைக்கப்பட்டதை,

“கோமகள்தன் கோயில் புக்கு நங்கைக்கு சிறப்பு அயர்ந்து” (Manickavasagan, 2010)

என்ற பாட்டு வரியால் அறியப்படுகிறது. ஆனால், வேள்வி முடித்து கண்ணகி காட்சியளித்து வாழ்த்தி வரம் தந்த பின்னர் வேத மரபினின்று மாறுபட்டு செங்குட்டுவன் வேவந்தியை அங்கே தங்கி நித்தல் விழாவணி நிகழ்த்திப் பலி பூசை செய்ய ஏவியபோது “பத்தினிக் கோட்டம்” என்று சுட்டுவதை,

“பத்தினிக் கோட்டப் படிப்புறம் வகுத்து

நித்தல் விழாஅணி நிகழ்க என்று ஏவிப்

பூவும் புகையும் மேவிய விரையும்

வேவந்தி கையைச் செய்க என்று அருளி

வலமுறை மும்முறை வந்ததன் வணங்கி”

இப்பாடல் வரிகள் புலப்படுத்துகின்றன (Manickavasagan, 2010).

இதனால் வேத மரபு பின்பற்றப்படும்போது மட்டும் கோட்டம் கோயில் என்று அழைக்கப்படுவது உறுதியாகின்றது.

## முடிவுரை

சிலப்பதிகாரம் தன்னுடைய காதையில் ஒன்றான குன்றக் குரவையில் குறிஞ்சி நிலத் தெய்வமாகிய முருகனின் வழிபாட்டைக் கூறுகிறது. ஆய்ச்சியர் குரவையில் முல்லைநிலத் தெய்வமான திருமால் வழிபாட்டைக் கூறுகிறது. இந்திரவிழவூரெடுத்த காதையில் மருத நிலத் தெய்வமான இந்திரன் வழிபாட்டைக் கூறுகிறது. கானல்வரியில் நெய்தல் நிலத் தெய்வமான வருணன் வழிபாடும், வேட்டுவரியில் கொற்றவை வழிபாடும் கூறப்பெற்றுள்ளன. செங்கோட்டுயர்வரையில் மங்கல மடந்தை கோட்டத்தில் மலைநாட்டுப் பெண்கள் குன்றக்குரவை ஆடி முருகனையும், வள்ளியையும், கண்ணகியையும் வழிபட்டனர் என்ற கருத்தும் பெறப்பட்டுள்ளது. சிவபெருமானை குறிக்கின்ற பொழுதெல்லாம் பிற தெய்வங்களுக்கு முதன்மையாகவே சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. எனவே சிலப்பதிகாரக் காலத்தில் தமிழ் மக்களால் மேற்கொள்ளப்பட்ட முதன்மை வழிபாடு சிவ வழிபாடே என்று உணர்த்தப்படுகிறது. இதுகாறும் கண்டவற்றுள் பண்டைத் தமிழகத்தில் கோயில் வழிபாடு வேள்விச்சாந்தி நிகழ்த்தி, வேதமரபைப் பின்பற்றி அமைந்தது என்றும் கோட்ட வழிபாடு வேதமரபை மீறி பிற வழிபாட்டு நடைமுறைகளைக் கொண்டிருந்தது என்றும் புலப்படுத்தப்பட்டுள்ளது. வழிபாட்டினால் வாழ்க்கை வளம்பெறும் என்பதை மக்கள் நம்பிக்கையாகக் கொண்டு வழிபட்டனர் என்பது புலப்படுத்தப்பட்டுள்ளது.

## References

Arul Pathmarasan, T. (2018) Tamil Panpadu, Murankalari Padaipagam, Chennai, India.

Dhandapani, D. (2010) Manimekali, Uma Pathippagam, Chennai, India.

Manickavasagan, G. (2010) Silapathikaram, Uma Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License